1973 மார்ச் 26]

Trawler Building Project.

*510 Q—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to set up a Public Limited Company for manufacturing trawlers at Mandapam in this State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மண்டபத்திலுள்ள, கப்பல் பழுது பார்க்கும் தளம், பணிக்களரி, சரிவுப்பாதை வசதிகளைப் பயன் படுத்திக்கொண்டு பொதுத் துறையின் கீழாயினும், கூட்டுத் துறையின் கீழாயினும் இழுவைப்படகு கட்டும் தளம் ஒன்றை அமைக்கும் செயற் குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, இந்த ஆண்டில் இவ்விதப் படகுகள் எத்தனை தயாரிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படு கிறது ? இதற்காக ஃபாரின் கொலாப்ரேஷன் ஏதாவது உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : வெளிநாட்டிலிருந்து 3 இழுவைப் படகுகள் வாங்குவது, மண்டபத்திலே 3 இழுவைப் படகுகள் கட்டுவது, மீனளத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்துவது, அதன் மூலமாக கூன் இரால்களைப் பிடித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. இதற்கு 2 கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

கும்முடிப்பூண்டியில் குடும்ப-சிறுர் நலத் திட்டம்.

* 511 வினா.—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் குடும்ப-சிறுர் நலத் திட்டம் ஒன்றைத் தொடங்குவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இந்த குடும்ப-சிறுர் நலத் திட்டம் தமிழ் நாட்டிலே வேறு எந்த எந்த ஒன்றியங்களிலே நடை பெற்றுக்கொண்டிருக்கிறது ? இது மத்திய அரசின் திட்டம் என்ருல் பிற்பட்ட பகுதியாகிய கும்முடிப்பூண்டியிலே இதைத் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

[1973 மார்ச் 26

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இது மத்திய அரசாங்கத்தினுல் அவர்கள் சமூக நல வாரியத்தினுல் துவங்கப்படுகிறது. 5 ஆண்டுகளுக்குப் பிறகு மாநில அரசிடம் ஒப்படைக்கப்படுகிறது. அவர்கள் ஒப்புதல் பெற்று தென் ஆற்காடு மாவட்டத்தில் குறிஞ்சிப்பாடியிலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் வில்லிவாக்கத்திலும், மதுரை மாவட்டத்தில் ஆத்தூர் என்ற இடத்திலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் பெரிய நாயக்கன்பாளையத்திலும் ஆகிய 4 நிலையங்கள் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. தஞ்சாவூர் மாவட்டத்திலே அறந்தாங்கியிலும், சேலம் மாவட்டத்திலே ஏர்க்காட்டிலும் அப்படிப்பட்ட நிலையங்கள் ஏற்படுத்த மத்திய சமூக நல வாரியத்திற்கு மாநில சமூகநல வாரியம் எழுதி இருக்கிறது. அதற்கு இன்னும் பதில் தரவில்லை. இதற்கு மேலே கும்முடிப்பூண்டியில் துவக்குவதற்கு செயற்குறிப்பு இல்லை. மத்திய வாரியம் ஒப்புக்கொள்ளுமா என்பதையும் இப்பொழுது சொல்ல முடியாது.

தஞ்சையிலுள்ள சீர்திருத்தப்பள்ளி.

* 512 வினு.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா ?

தஞ்சையில் உள்ள சிறுவர்களை திருத்தும் சிறைச்சாலையில் தற்போது எத்தனை பேர் இருக்கிறார்கள் ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : 3—3—1973-தேதி 455 (நானூற்று ஐம்பத்து ஐந்து) பேர் இருந்தனர்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தஞ்சையிலே இப்படிப்பட்ட சிறுவர்களைத் திருத்தும் சிறைச்சாலையிலே சிறுவர்களைத் திருத்துவதற்கு எந்த எந்த முயற்சிகள் எந்த எந்த அடிப்படையிலே மேற்கொள்ளப்படுகின்றன ? அவர்கள் சிறைச்சாலையிலிருந்து வெறியேறியதற்குப் பிறகு வாழ்க்கையிலே செம்மையுற நடப்பதற்கு அரசு என்ன என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இப்பொழுது சிறைச்சாலை என்று அது இல்லை. 1944-ஆம் ஆண்டிற்கு முன்னுல் ஸ்பெஷல் ஜெயில் என்று இருந்தது. இப்பொழுது அவை சர்டிபைட் ஸ்கூல்ஸ் என்றும் அப்ரூவ்ட் ஸ்கூல்ஸ் என்றும் சொல்லப்படுகிறது. எனவே அது ஜெயில் அல்ல. கல்வி, கைத்தொழில் அவர்களுக்குச் சொல்லித் தரப்படுகிறது. 1-வது முதல் 8-வது வகுப்பு வரையில் பள்ளி இறுதி வகுப்பு வரையில் படிப்பதற்கும், வாத்தியம், கொத்து வேலை, தச்சு வேலை, நெசவு வேலை, தையல் வேலை, தோட்ட வேலை போன்ற வேலைகள், உடற்பயிற்சி, மன போதனை போன்றவைகளும் முறையாகச் சொல்லித் தரப்படுகின்றன. படித்து அவர்கள் வீட்டிற்குச் சென்றதற்குப் பிறகு புரபேஷனரி ஆபீஸர்கள் அவர்களோடு தொடர்புகொண்டு வாழ்வில் அவர்கள் நல்ல விதமாக வாழ்வதற்கான எல்லாவித முயற்சிகளும் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.